முற்பகல் 11-30

4. விதி 110–ன்கீழ் அளிக்கப்படும் அறிக்கைகளுக்கு நன்றி தெரிவிக்கையில் கோரிக்கை வைப்பதைத் தவிர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டமன்றப் பேரவை விதி 110-ன்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைப் பேரவைக்கு அளித்த பின்னர், அப்போது அவ்வறிக்கையின்மீது எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது என்று விதிகளில் தெளிவாக உள்ளது. அதேசமயத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வறிக்கையின்மூலம் தமிழக மக்களுக்கு அளிக்கும் பல்வேறு நலத் திட்டங்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கு நான் அனுமதி அளித்து வருகிறேன். ஆனால், சில உறுப்பினர்கள் நன்றி தெரிவிப்பதோடு அவர்களது கோரிக்கைகளையும் வைக்கின்றனர்.*

நாள்தோறும் தமிழக மக்கள் எதிர்பார்க்கும் ஒளிமயமான நல்ல பல திட்டங்களை பேரவை விதி 110-ன்கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கைகளாக அளித்து வரும் சூழ்நிலையில், (மேசையைத் தட்டும் ஒலி) சில உறுப்பினர்கள் நன்றி தெரிவிக்கும்போது கோரிக்கைகளையும் வைப்பது அந்தத் திட்டங்களின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் விதமாக அமையும் என்பதால் உறுப்பினர்கள் அவ்வாறு கோரிக்கை வைப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

5. விசைத்தறிகளுக்கான மின் கட்டண சலுகை, மாற்றுத் திறன் குழந்தைகளுக்கு ஆதார வள மையம், கிராம விளையாட்டுப் போட்டிகள்–நேரு விளையாட்டரங்க மேம்பாடு மற்றும் மேட்டூர் அனல் மின் நிலைய தீ விபத்து–நிவாரணம்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சிக் கவிஞர் பாரதியார், 'பெரிதினும் பெரிது*